உ
சிவமயம்



அமரர்

# திருமதி. பொன்னம்மா வேலாயுதபிள்ளை

அவர்கள் சிவபதமடைந்ததையிட்டு வெளியிடப்படும்

## 31ம் நாள் நினைவாஞ்சலி

## நினைவு மலர்

05.03.2001

31st Day Ceremony of Remembrance
of the
LATE MRS. PONNAMMA VELAYUTHAPILLAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# அமரர்
# திருமதி. பொன்னம்மா வேலாயுதபிள்ளை

| | |
|---|---|
| மண்ணில் | விண்ணில் |
| 18.05.1934. | 03.02.2001. |

## திதி வெண்பா

விக்கிரமந்தன்னில் தை மாதம் சேர்
பூர்வபக்கம் தசமித் திதி தன்னில்
ரோகிணி சுப வேளையதனில்
பொன்னம்மா பூவுலகினை விட்டுநீங்கினளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்





# சமர்ப்பணம்

அல்வாய் மேற்கு - திக்கத்தைப் பிறப்பிடமாகவும்
தெல்லிப்பழை - வீமன்காமத்தைப் புகுந்த இடமாகவும்
கொண்ட
எங்கள் குல தெய்வமாய் விளங்கிய

## அமரர். திருமதி. பொன்னம்மா வேலாயுதபிள்ளை

அவர்கள் நினைவாக நடைபெறும்

மதியபோசன உபசாரத்தன்று, பிறப்பு, இறப்பு அற்ற
நித்திய சர்வ சந்தோஷரான சிவபெருமானின்
பாதங்களை அடைந்து, எம் பெருமானின்
திருநடனத்தை நித்தமும் காணவேண்டுமென்று
பிரார்த்தித்து, இம்மலரை அமரர்தம்
பாதங்களில் சமர்ப்பணம் செய்கிறோம்.

கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்

# திருமதி. பொன்னம்மா வேலாயுதபிள்ளை

## அவர்களின் வாழ்க்கைச் சுருக்கம்

ஈழமணித்திருநாட்டின் சிரம் எனத் திகழ்வது யாழ்ப்பாண மாநிலம். இம்மாநிலத்து வடபால் திகழும் வடமராட்சியின் கண் அல்வாய் மேற்கு எனும் பேரூரின் திக்கம் எனும் கிராமத்தில் உயர் சைவ வேளாண்குலத் திலகர் தியாகர் பரம்பரையொன்றுண்டு. இப்பரம்பரையின் வழித்தோன்றலாகத் தோன்றியவர் காலம் சென்ற கதிர்காமர் சின்னத்தம்பி. இவர் அவ்வூர் பெருங்குடிப் பிறந்த காலம் சென்ற பெரியதம்பி சின்னாச்சிப்பிள்ளையை மணந்து அமரர் பொன்னம்மாவை கனிஷ்ட புத்திரியாகப் பெற்றெடுத்தனர். இவரின் மூத்த சகோதரர்களாகக் காலஞ்சென்ற சின்னத்தங்கம், அன்னப்பிள்ளை, பத்தினிப்பிள்ளை, செல்லம்மா, சின்னத்துரை (Accountant, F.C.M.A., MBA) ஆகியோரும், இராசா என்பவரும் அவதரித்தனர்.

அமரர் பொன்னம்மா அவர்கள் தனது பள்ளிப்பருவத்தை திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலத்தில் பூர்த்தி செய்தார். இவர் பாடசாலையில் கல்விகற்கும் போதே அவ்வூர் மடத்துவாசல் பிள்ளையார் ஆலயத் தொண்டராகத் திகழ்ந்தார். நிதமும் இப் பிள்ளையார் ஆலயத்துக்குக் காலையும் மாலையும் சென்று சரிகை வழிபாடுகள் செய்து வணங்கி வந்தார்.

யாழ். வலிகாமம் வடக்கு வீமன்காமம் தெல்லிப்பழை என்னும் பேரூரில் இராசகெம்பீர முதலியார் வழித்தோன்றலாகிய உயர் சைவ வேளாண்குலத் திலகர் கதிரித்தம்பி - இராசம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் வேலாயுதபிள்ளை (ஓய்வு பெற்ற நிதி உதவியாளர், கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம், அகில இலங்கை சமாதான நீதிவான்)யை 1960ம் ஆண்டு ஆடி மாதம் 1ந் திகதி திருமணம் செய்தார். இல்லறமே நல்லறமாக இருவரும் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வரும் காலத்தில், இல்லறத்தின் நற்பேறாக வனஜா, ஜெயபவானி ஆகிய இரு முத்துக்களையும் பெற்று பெருமையடைந்தனர்.

காலச் சக்கரம் சுழல மூத்தமகள் வனஜாவை கதிரவேலு ஸ்ரீரங்கனும் (முன்னாள் அதிபர் ஆனைவிழுந்தான் மகா வித்தியாலயம், கிளிநொச்சி.) தற்போது (Middle East Wire & Wireless Ltd. U.K.) ஜெயபவானியை (முன்னாள் விஞ்ஞான- கணித ஆசிரியை, நடேஸ்வராக் கல்லூரி, காங்கேசன்துறை, வீமன்காமம் மகா வித்தியாலயம், தெல்லிப்பழை) கனகசுந்தரம் குருபரன் ( உதவித் தரக் கட்டுபாட்டு அதிகாரி ( Electrisola



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- Electro - Feindraht, Swiss) என்பவரும் திருமணம் புரிந்தனர். அதன் பேறாக அச்சுதன், ஆர்த்திகை, விவேகா, வர்ணசுதன், கீர்த்தனா, மௌலிகரன், ஆகிய ஆறு பேரக்குழந்தைகளின் மழலையில் திளைத்து பேரின்பம் அடைந்தார்.

அமரர் பொன்னம்மா அடக்கமுள்ள, எளிய, கலகலப்பான இயல்புடையவர். எல்லோரிடமும் பண்பாகவும், அன்பாகவும் பேசிப் பழகுபவர். இறைவழிபாட்டிலும், தமது கடமைகளிலும் பெரும் நம்பிக்கை கொண்டவர். மங்கை நல்லாள் பொன்னம்மாவின் இரு பிள்ளைகளும் மங்கலமாகிய மனைமாட்சி எய்தி, அதன் நன்கலனாம் மக்கட் பேறுமடைந்து, தன் கண்முன்னே சகல சம்பத்தோடும் வாழ்ந்து வருகின்றமை கண்டு பெரு மகிழ் வெய்தியிருந்தார். தியாகத்தின் சின்னமாக விளங்கிய பொன்னம்மா அவர்கள் சில நாட்களாக நோய் வாய்ப்பட்டிருந்தார். நோய்க்கு உரிய சிகிச்சைகள் யாவும் செய்யப்பட்டன. கணவனும் பிள்ளைகளும் தாம் குடியிருந்த கோயிலை அழிய விடாது காப்பாற்றப் பிரமப்பிரயத்தனங்கள் எல்லாம் செய்தனர். செய்துமென்ன? காலன் காலங்கருதி இருந்ததை யாரே அறிவர்! அற்றம் பார்த்துக் காத்திருந்த கூற்றம், விக்கிரம வருடம் தைமாதம் 21ம் நாள் (03.02.2001) சனிக்கிழமை காலை பூர்வபக்கத் தசமித் திதியும், ரோகிணி நட்சத்திரமும் அமிர்தசித்த யோகமுங் கூடிய வேளையில் பொன்னம்மா, அவர்களது உயிரைக் கவர்ந்து சிவன் திருவடி நிழலிற் சேர்த்தது. பொன்னம்மாவும் வினையொழிந்தமையால் வினைப்போகமாகிய தேகம் விடுத்து, இறைவன் பாத கமலங்களைச் சரணடைந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைவதாக.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருமதி. பொன்னம்மா வேலாயுதபிள்ளை

## அவர்களின்

## முப்பத்தோராம் நாள் நினைவு குறித்த

## நேரிசை வெண்பா

ஈழமணித்திருநாட்டின்
இமயமது
வடபுலந்தன்னில்
வன்னியர் போற்ற
வைகை நதி யெனவே
வற்றாத ஊற்றென
செகதலம் செப்பி நிற்கும்
சேத்திரம் இது
யாழினை வாசித்து
யாழ்ப்பாணம் எனும்
யெளவ்வன மாநிலம்
தமிழனின் பெருமைதனை
தனிப்பெரும் புகழுடன்
பறைசாற்றி நிற்கும்
யாழ்ப்பாண நன் நகரம்
ஆங்கோர்,
கற்றோர் வாழும்
கவினுறு ஊராம்
வடபுலத்து பெருமைதனை
வாஞ்சையுடன் செப்பி நிற்கும்
வடமராட்சி நகரின்
அயலவர் தனை
அன்புடன் உபசரிக்கும்
ஊரது அல்வாய் மேற்கு
எனும் பெரும்பதி
அங்கே,
தித்திப்பூட்டும் சிற்றூர்
திக்கம் தனில்
உயர்ந்த பண்புதனை
உலகிற்கு உவந்து வழங்கும்
உயர் சைவ வேளாளர்
உவந்தேற்றும்
வேளாண்மை தன்னால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்றிடம் பெயரா
வேளாளர் குலம் தன்னில்
தியாகச் செம்மல்
பரம்பரை என
பண்டுதொட்டு வழங்கிவரும்
பரம்பரை தன்னில்
வாழையடி வாழையென
முன்னோர் வகுத்த
பரம்பரையில்
சிப்பிக்குள் முத்தென
சிறப்புடன்
ஏறு போல் பீடு நடைபோடும்
கதிர்காமக் கடவுளைக்
கருணையுடன் போற்றிவழிபடும்
கதிர்காமர் அவதரித்தார்.
சிறுமை கருதாது
சீரிய பணிபுரியும்
சின்னத்தம்பியும்
சிறப்புடன் வந்துதித்தனர்
கதிர்காமர் சின்னத்தம்பி
மணாளன்
அவ்வூர்தனில்
அரும்பெரும் காரியம் இயற்றி
அகமெலாம் குளிர வைக்கும்
அற்புத வானாவான்
பெரியதம்பியென
பேரறிவாளன் பெற்றெடுத்த
சின்னத்தனம் அற்றசிகரம்
சின்னாச்சிப்பிள்ளையை
திருமணம் புரிந்து
அகமிக மகிழ்ந்தனன்
இவர்கள் இப்போ
இவ்வுலகை விட்டு
இறைபதம் சேர்ந்தனர்.
இவர்களின் இனிய
இல்வாழ்வின் பயனால்
அமரத்துவ மடைந்த
அகல்விளக்கு
அன்னைக்கு அன்னையாய்
அருள் சுரக்கும் தயாபரி
பொன்னினை இகழும்
பொற்கொடி
குணமதில் இமயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைகள் ஏதும் அற்ற குணநிதி
பொன்னம்மாவை பெற்றெடுத்து
குதூகலம் அடைந்தார்.
பொன்னம்மா தன்னின்
பொற்குணம் கண்டு மகிழ
முன்னவளாய்
மூத்தவளாய் அவதரித்தாள்
இப்பாரினிலே
சகோதரபாசம்
சரித்திரம் போற்றும்
சீரிய குணவதி
சின்னத்தங்கமும்
அன்னநடையாள்
அன்னப்பிள்ளை அகிலத்தின்
ஊற்றென அவதரித்தாள்
பத்தினித் தெய்வமென
பாவலரும் போற்றும் பத்தினி
பத்தினிப்பிள்ளையும்
செல்வம் நிறை சீமாட்டி
செல்லம்மா தானும்
துரைகளில் சிறந்த
சீரிய செயல்தனைப் பகன்றிடும்
சின்னத்துரை இவன்
கணக்கியல் துறையின்
முதுகெலும்பு
காசினி போற்றிடும் ஆசான்
கணக்காளராய் திகழ்ந்தனன்
இராச நடை போடும்
இராசவும் உதித்தனர்.
இனி
பொன்னம்மா தானும்
துள்ளித்திரிந்து
புள்ளி மானெனப் பவனிவரும்
பள்ளி வாழ்க்கையைப்
பணிவுடன் பகர்வோம்
திக்கம் நகரில்
சித்தியைத் தந்திடும்
சித்தி விநாயகர்
வித்தியாலயம் தன்னில்
பாங்குடன் கல்விதனைப்
பக்குவமுடன் பயின்ற பைங்கொடி
அந்நாளில் படைத்திட்ட
சாதனைகளோ பலகோடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிவையர் திலகம்
அன்புடைய மனையாட்டி
மடத்து வாசல் தன்னில்
மனங்குளிர அருள்சுரக்கும்
முன்னவன் விநாயகரின்
ஆலயம் தன்னில் தொண்டுகள்
பற்பல முறையாகப் புரிந்தனள்.
இத்துடன் நில்லாது
காலையும் மாலையும்
ஆலயம் சென்று
வழிபாடியற்றி
இறைநாமம் ஜெபித்தனள்.
இனி
செந்தமிழ்ச் செல்வி
செகம்புகழும்வல்லி
திருமணவாழ்வினைச்
சற்று நோக்கிடுவோம்
யாழ் நகர் தன்னில்
வற்றாத கனிவளம் கொண்ட
வலிகாமம் வடக்கில்
வீரர்கள் செறிந்த
வீமன்காமம் தன்னில்
தெவிட்டாத செய்திகளைப் பகரும்
தெல்லிப்பழையில்
இராசகெம்பீர முதலியார்
வழித்தோன்றலில்
உயர்ந்த பரம்பரையில்
சைவம் செழிக்க
வந்துதித்த பரம்பரையில்
கலைகள் பல பெற்று
கவித்துவம் படைத்த
கதிரித்தம்பி
இனிய நங்கை வல்லாள்
இராசம்மா
பெறுதற்கரிய பலனால்
பெற்ற முத்து
வேலெனப் பாய்ந்து பகைவர்
குலத்தை வேரற அழிக்கும் வல்லோன்
வேலாயுதபிள்ளை
இவன் பெருமைதனை
சற்றே நோக்கிடுவோம்
கல்விக்கென கவினுற
விளங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வித் திணைக் களத்தின்
நிதியியல் துறைகளில்
நிபுணத்துவம் பெற்ற
உதவி நிதியாளன்
யாழ் கல்வித்திணைக்களத்தில்
யௌவன புருஷன்
அகில இலங்கை தன்னில்
அவனி புகழும்
சமாதானம் தனை
தனிப் பெரும் வழியில் உரைத்து
நிற்கும் சகத்திரநாயகன்
சமாதான நீதிவானும் ஆவான்
இவர்கள் இருவரும்
திருமண வாழ்வில் இணைந்தனர்
ஆயிரத்து தொளாயிரத்து
அறுபதாம் ஆண்டு ஆடிமாதம்
ஓராம் திகதி
இல்லறமே நல்லறமாக
இணைந்து வாழும் நாளில்
இனிய கனவுகள்
பற்பல கண்டனர்
ஈருடலும் ஓருயிருமாய்
இணைந்து வாழ்க்கையில்
சிப்பிக்குள் முத்தென
இருமுத்துக்களை
இன்பமுடன் உகித்தனர்
வதன சொரூபினி
வனஜாவும்
ஜெயம்பல பெற்ற
ஜெயபவானியும்
அவதரித்தனரே
இக்காலம் தன்னில்
காலச்சக்கரம்
காலத்தை நகர்த்திச்சுழல
முன்னம் முன்னம் அவதரித்த
வதனசுந்தரி வனஜாவை
கருணையுள்ளம் கொண்ட
கதிரவேலு
காத்திரமாய் பெற்றெடுத்த
ஸ்ரீரங்கனும்
கைத்தலம் பற்றிக்
களிப்புக் கொண்டனன்
ஸ்ரீரங்கன் பெருமைதனைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்றே நோக்கிடுவோம்.

முன்னாள் அதிபர்
ஆனைவிழுந்தான் மகாவித்தியாலயம்
முறைப்படி சேவை செய்திடும்
வள்ளல்
பாரியை நினைவூட்டும் பார்வை
கர்ணனை விஞ்சிடும் கொடை
இவன் அகமது
அன்றலர்ந்த செந்தாமரையை
விஞ்சிடும்.

தற்போது இவன்
இலண்டன் மாநகரில்
இனிய சேவை பகர்கின்றான்
சற்றே சந்தோசஷம் பெற்று
இவன் புகழ்தனை
இனிதே முடிப்போம்.
ஜெகம்புகழும் ஜெயபவானியை
ஜெகம் புகழ்ந்தேற்றும்
காங்கேசன்துறைதன்னில்
களிப்பூட்டும்
நடேஸ்வராக் கல்லூரி தன்னில்
விஞ்ஞான, கணித ஆசிரியையாய்
விஞ்சிடும் சேவை செய்த வித்தகி
கனகத்தை நினைவூட்டும்
குணாளன்
கனகசுந்தரம் பெற்றெடுத்த
குறும்புப் புன்னகை தனை
குவலயத்தில் தவழவிடும்
குருபரனும்
சுவிஸ் நாட்டில் வாசம் செய்து
உதவித் தொழில்நுட்பக்
கட்டுபாட்டதிகாரியாய்
கண்ணியம் மிக்க சேவைசெய்திடும்
காருண்ய புருஷனே
ஒழுக்க நெறிக்கோர் உதாரணமாய்
ஒப்பற்ற சேவை செய்திடும்
ஒளி விளக்கானவனே
ஓங்காரநாதம்தனை
உச்சரித்திடும்
உன்னத குருபரனும்
ஏக்கம் கொண்டே
ஏனிந்த நிலையென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏங்கித் தவிக்கின்றான்
வீரநடை பயின்று
விண்ணிற்கு உயர்ந்தவனே
அகிலம் போற்றிடும்
அற்புத நாயகன் - இவன்
இவன் புகழ்பாடி
அமைதியாம் அடைவோம்.

அமரர் பொன்னம்மா
அகிலம் புகழும் உத்தமி
அடக்கத்தை அவனியில்
உதயமாகிட வைத்தாள்
எளிய நடை பயின்று
ஏகாந்த நிலை நீக்கி நின்றாள்
கலகலப்பின் உறைவிடம்
அன்பு மழை பொழிந்து
அவனியை மகிழ்வித்தாள்
பொன்னை யொத்த வதனம்
போக்கிடமின்றி வரும்
நபர்களைப் போஷிக்கும்
தயாபரி
சென்றனளே இறைபதம்
நெஞ்சு பதைபதைக்க
நெடுந்தூரம் சென்றாயோ
பொல்லாத காலனிவன்
பொல்லாங்கு செய்தானே
கூற்றுவனே
எம் குடும்பத் தலைவியை
எங்கு கொண்டு சென்றாய்
இக்கணமே இறைவா
எம் இடுக்கண் களைந்து
இன்பம் தந்து
ஈடேற்றம் அளித்திடுவாய்.
பொன்னம்மா மாதுவின்
புகழ்தனைக் கூறிட
வார்த்தைகள் இல்லை
வையகம் தழைத்திட
வந்துதித்த நாயகியை
வாயார வாழ்த்தி
ஆன்ம இளைப்பாற்றில்
அமைதியது நாம் கொண்டு
சாந்த நிலை பெற்று
சரித்திரம் படைத்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரலாபம்

## கணவன் கண்ணீர்

நாற்பது ஆண்டுகள் என்னுடன்
வாழ்ந்த நாயகியே
பொன்னம்மா என் செல்வமே
எங்கு சென்றாய் என்னைத்
தவிக்கவிட்டு
ஏகாந்த நிலைதனை
எனக்களித்து எங்கு சென்று
ஒளிந்தாயோ
யானறியேன் என்வாழ்வில்
விடிவெள்ளியே
பதறித்துடிக்கின்றேன்
பறந்தோடி வந்திடாயோ

"மூத்த மகள் வனஜா(திருமதி. ஸ்ரீரங்கன்) புலம்பல்"

அம்மா என அழைத்து
ஆறுதல் அளித்தேனே
இனி யான் யாரை
அம்மாவென அழைப்பேன்
அறுசுவை உண்டிதனை
அன்புடன் ஊட்டிய அம்மா
கொந்தளிக்கும் கடலினையும்
கோரமான புயலினையும்
வென்றதுவே என்னுள்ளம்
வேகித்துடிக்கின்றேன் - என்
வேதனை அறியாயோ - அம்மா
நிழலாக இருந்து
நிம்மதியைத் தாராயோ.

"இளைய மகள் ஜெயபவானி(திருமதி. குருபரன்) புலம்பல்"

உயிருடன் உன்னைக்
காண்பதற்கே
உவகை கொண்டு வந்தேனம்மா
கொடுத்து நான் வைக்கவில்லை
கொடுங்காலன் - உன்னைக்
கவர்ந்துவிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன பாவம் செய்தேனோ
இப்படி ஓர் துன்பம் - என்னை
வாட்டி வதைக்கிறதே
அம்மா
தாய்ப்பாசம் காட்டி
தரணியை ஆண்ட அம்மா
ஏமாற்றிச் சென்றாயே
ஏனம்மா மௌனம்
எத்தனை ஆதங்கமுடன்
விமானமேறி வந்தேனம்மா
வந்தும் என்னபயன்.
உன் முகம் பார்த்துப்பேச
உடனடியாய் நான் வந்தேன்
வந்தும் என்ன பயன் - உன்னை
உயிருடன் காண
நான் கொடுத்து வைக்கவில்லையே
உந்தன் இறுதி மொழி
கேட்பதற்கே
வந்தேனம்மா
என்னை ஏமாற்றிவிட்டு
சென்ற மாயமென்ன
என் கனவிலே வந்து
களிப்பூட்டமாட்டாயா - அம்மா
இரத்தக்கண்ணீர் வடிக்கிறேன்
இன்பம் தந்திட வந்திடம்மா.

" மூத்த மருமகன் க. ஸ்ரீரங்கன் புலம்பல்"

என் ஆசை மாமி
மாமி, மாமியென மகிழ்வுடன்
அழைப்பேனே
மனமகிழ்வாக என்னை வசப்படுத்தும்
மாமி
ஓடோடி வருவாயா
என் வாழ்வில் ஒளித்தீபம் ஏற்றிய
மாமி
மயக்கம் தான் வருகிறது
என் செய்வேன் மாமி
ஏங்கி அழுகின்றேன் மாமி
என் சோகம் துடைத்து விடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இளைய மருமகன் க. குருபரன் புலம்பல்"

மாமியே - என் ஆசைமாமியே
மருமகன் என்னை
மனங்கோண வைக்காத மாதரசியே
ஒன்பது வருடத்தின்பின்
ஓடோடி வந்தேனே
என் ஆசை மாமியே
எனக்கு உன் மகளைத்தந்து
உவகை செய்த மாமியே
எம் வாழ்வை வளப்படுத்தி
வாழவைத்த மாமியே
மனமெல்லாம், உளமெல்லாம் மாமி
உந்தன் நினைவாலே
குமுறி அழுகின்றேன்.
என்குடியை வாழ வைத்த
என்னருமை மாமியே
சுவிஸில் நான் இருந்தாலும்
என் நினைப்பெல்லாம்
நீங்களே மாமி
நிஜமாக வந்து
நிம்மதியைத் தந்திடுங்கள்.

"பேரன் -ஸ்ரீ. அச்சுதன் புலம்பல்"

அச்சுதன் யானும்
உனை மறப்பேனோ
பதினாலு வயது வந்துற்ற போதிலும்
பாவியான் உன்
பரிவான அணைப்பினைத் துறந்தேனே
உந்தன் மரணச்செய்தி கேட்டு
மதி மயங்கி நின்றேனே
அம்மம்மா ஆரமுதே
உங்கனுக்குப் பந்தம் பிடிக்கும்
பாக்கியம் பெற்று
பரமதிருப்தி அடைந்தேனே
உந்தன் பூதவுடலைச்
சுமக்கும் பாக்கியம் பெற்று
சுபீட்சம் அடைந்தேனே
அம்மம்மா ஓர்
அன்புமடல் - உந்தனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணோக்கிச் சென்றாலும்
எனக்கு
விமோசனம் அளித்திடுவாய்.

"பேத்தி - ஸ்ரீ. ஆர்த்திகை புலம்பல்"

அம்மம்மா - ஏனம்மா
எமை விட்டுச் சென்றாய்
பூப்புனித நீராட்டு விழாதன்னை
பூரிப்புடன் செய்தாயே.
உணவூட்டி மகிழ்வு கொண்டு
உன்துயர் துடைப்பாயே
யார் அம்மம்மா
இனி எனக்கு உணவூட்டி
உவகை கொள்வார்
பசித்திருந்து -நீயும்
பரிவுடனே எந்தனுக்கு
உணவூட்டி உவப்பான
கதை சொல்லி
ஆற்றுப் படுத்து வாயே
இனி
எங்கு நான் - உன் மலர்முகம்
காண்பேன் - அம்மம்மா.

"பேத்தி - ஸ்ரீ. விவேகா புலம்பல்"

விவேகா என விநயமுடன்
அழைக்கும் அம்மம்மா
விண்ணோக்கிச் சென்ற தென்ன
விதி செய்த சதியோ
விம்மி விம்மி அழுகின்றேன்
விவேகத்தில் சிறந்து
விருப்புடனே கல்வி கற்று
காசினி மெச்சிட
கருணை காட்டிய
அம்மம்மா
என்னை
காவிய நாயகியாக்கி
களிப்பு கொண்ட அம்மம்மா
கவனிப்பாரின்றி நான் வாழல்
முறையோ
கண்டிப்பாய் வந்து விடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "பேரன் - ஸ்ரீ. வர்ணசுதன் புலம்பல்"

அன்பிற்கினிய அம்மம்மா
ஆதரவு தந்திடம்மா
வண்ண வண்ணக் கனவு கண்டு
வாஞ்சையும் நான் கொண்டேன்
ஏமாற்றிச் சென்றாயோ
ஏனிந்த மாயம்
மௌனமது கலைந்து
புன்சிரிப்பு உதிர்ந்திடுவாய்
புவனமது பூரிக்க,
புதுப்பூவாய் மலர்ந்திடுவாய்
அம்மா என அழைத்து
ஆறுதல் நான் கொண்டேன்
யார் கண் பட்டதோ
எப்படி என்னை
கண்ணை இமை இரண்டும்
காப்பதுபோல்
காத்தீர்கள்
காலனவனைக் கண்டால்
அம்மம்மா - நான்
கடித்துமே குதறிடுவேன்
பாசமழை பொழிந்து
பாரினிலே - எனை வாழவைத்தாய்
உன் மடியில் விளையாடி
உவகையது நான் கொண்டேன்
உத்தமியே - அம்மம்மா
உன்னாணை வந்துவிடு.

## "பேத்தி - கு. கீர்த்தனா புலம்பல்"

அம்மம்மா - அகிலத்தின்
அணையாதீபமே
கட்டியணைத்து - கருணை
காட்டிடுவாய்
காலமெல்லாம் - உன் நினைவு
பசுமரத்தாணிபோல்
பதிந்து விட்டதம்மா
பகலவனின் ஒளி தன்னை
பரிகசிக்கும் - உன் பார்வை
விரைந்தோடி வந்திடம்மா
விருப்பாய் அழைக்கின்றேன்
வருடங்கள் தோறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகை வாங்கி அனுப்பி
குறுநகை பூப்பாயே
பிறந்த நாட்கள் தோறும்
புது உடுப்பு வாங்கித்
தந்திடுவாய்
என்ன கொடுமையிது
அம்மம்மா
எழுந்து நீ வந்திடம்மா
கீர்த்தனா என அழைக்கும்
அம்மம்மா
இனி யார் என்னை
கீர்த்தனா என அழைப்பார்
அம்மம்மா வந்துவிடு
ஆசை முத்தம் தந்துவிடு
உன் முத்தம் ஒன்றே - எனக்கு
போதுமம்மா - அம்மம்மா.

"பேரன் - கு. மௌலிகரன் புலம்பல்"

அம்மம்மா அம்மம்மா
அன்பு முத்தம் தந்திடம்மா
ஆதரவு அற்று நான் தவிக்க
எங்கு சென்று மறைந்தாயோ
மறைந்த இடம் தெரிந்தால்
தேடி வந்து அழைத்திடுவேன்
அலைய விட்டு - என்னை
ஏமாற்றலாமோ - அம்மம்மா
உன்னுடன் விளையாடிய
காலத்தை எப்படி நான் மறப்பேன்
விரைந்தோடி வந்து
விடிவைத் தந்துவிடு - அம்மம்மா.

## தேற்றம்

ஆண்டாண்டு காலமும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ - மாநிலத்தே
பொன்னம்மா மாது - புவனம் துறந்து
ஈசனடி சென்றாள்
இறைவன் கழலடியில் இன்புற்று
வாழ துதித்திடுவோம் பரமன் பாதம்.

- "மாவையூர்"
விஸ்வலிங்கம் - சண்முகசுந்தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்கா நினைவுகள்

மாவைக்கந்தன் திருவருள் பாலித்து நிற்கும் வலி- வடக்கில் தெல்லி-நகர்-உயர் திரு. வேலாயுதபிள்ளை அவர்கள் மங்காப் புகழ் பெற்று இன்று அகில இலங்கை மாநிலந்தன்னில் சத்யம் தவறாது நீதவானாகத் திகழப் பின்னணியில் உந்து சக்தியாக விளங்கிப் பொன்னுடல் நீத்துப் புகழுடம்பெய்திய திடுக்கிடும் செய்தி கேட்டதும் எமது மனம் உணர்விழந்து பரிதவித்தது ஒரு கணம்.

"*வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம்*" - இது இயற்கையின் நியதி! வடமராட்சி திக்கம் தந்த பெண்ணியல் Delmon மருத்துவமனையில் மிடுக்குடன் கிடந்து மகள் வனஜாவிடம் உரிமையுடன் " பழம் கேட்டு வேண்டியருந்திய காட்சியை யார் தான் மறக்கமுடியும்? " *பிறந்தவர் என்றோ இறந்தே தீருவர்* - ஆனால் இவர் இவ்வளவு சடுதியாக இறப்பார் என்று யார் தான் நினைத்தார்கள்.

'சுவிஸிலிருந்து மகள் ஜெயா வீடுவரவுள்ளார் குடும்பமாக வரவுள்ளார்' - வெள்ளிக்கிழமை வீட்டில் விளக்கேற்றி வைத்து மகளை வரவேற்றல் முறையெனச் சென்றவர். மறு நாள் விடியற்காலை மீளவும் Delmon மருத்துவமனை வந்து மீளாத்துயில் கொள்வாரென யார்தான் எதிர்பார்த்தார்கள் !

Millennium நூற்றாண்டு - கால் ஊனமுற்றிருந்துங் கூட கதிர்காமப் புனிதயாத்திரை செய்ய எம்மையும் அழைத்துச்செல்ல இறையருள் பாலித்தது போலும் ! மலை உச்சிக்குப் போய் கந்தனைத் தரிசிக்க எல்லோரும் விரைந்தனர். நான் எனது பாரியாருடன் அமரர் பொன் அம்மையாருடன் பிள்ளையார் வாசலில் தங்கியிருந்தவேளை அம்மையாரின் மனம் பேதலித்துக் கொண்டிருந்தது. காலூனமுற்றாலும் மனம் கதிரமலை ஏற வேணும் கந்தனின் தரிசனம் கிடைக்க வேண்டுமென அழுதபடியிருந்தது. தமிழ் மொழிபேசத் தெரிந்த சிங்கள சகோதரர் ஒருவர் அமரத்துவம் எய்தமுன் கதிர்காமக்கந்தனின் மலையுச்சித் தரிசனம் பெற வழிசமைத்தார். அம்மையாருடன் நாமும் அவரது வாகனத்திலேறி கதிரமலை உச்சியை அடைந்து கந்தனின் தரிசனம் கிடைக்கப் பெற்றோம். "*தொண்டர் தம் பெருமை சொல்லில் அடங்காது*" கல்வித் திணைக்களத்தின் சிரேஷ்ட பதவி வகித்ததனால் போலும் திரு. வேலாயுதபிள்ளை கடைசி வரை பொறுமையைக் கடைப்பிடித்தது. அம்மையாரின் இறுதி யாத்திரையின் போதும் எல்லோரையும் வரவேற்றுத் தழும்பாமல் மனவுறுதியுடன் பணி செய்து கிடந்தமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது மனக் கண்ணிற் நீங்காத நினைவுகளே !

திருமூலர் திருவாய் மலர்ந்த " *சிவபூமி* " யுத்த பூமியாக மாறிவரும் வேளை அமரத்துவம் எய்திய பொன் அம்மையாரின் பிரிவால் துயருறும் கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சுற்றத்தோர், நண்பர்கள். அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறையருளை இறைஞ்சிப் பிரார்த்திப்போமாக.

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே!
குறமாதைப் புணர்வோனே குகநேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே!

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

M.A. கனகசிங்கம
Retd. Principal
B.A(Hons.) Geog(Cal.)
Dip-in-Edu. Cey.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
திருசிற்றம்பலம்

## விநாயகர் வணக்கம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

## தேவாரம்

தோடுடைய செவியன் விடைஏறியோர் தூவெண் மதிசூடி
காடுடைய சுடலைப் பொடி பூசி என் உள்ளங் கவர் கள்வன்
ஏடுடைய மலரான்உனை நாட்பணிந் தேத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மான் இவனன்றே.

## திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து உன்விரை ஆர்கழற்கு என்
கைதான் தலை வைத்து கண்ணீர் ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்த்து உன்னைப் போற்றி சயசய போற்றி என்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய் உன்னைக் கண்டு கொள்ளே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற வெஞ்சிவனைத் திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளம் குளிர என் கண்கள் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லான்டிற் சிதையுஞ் சிவ தேவர் சிறு நெறி சேராமே
வில்லாண்ட கனக்கதிரவன் மேருவிடங்கள் விடைபாகன்
பல்லாண்டு என்னும் பதங் கடந்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புகழ்

இறவாத இன்பு அன்பு வேண்டிப் பின் வேண்டுகிறார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்க உன்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும் பற்றியே மாதிருப் புகழ் பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின் முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமாதான சற் குணா நேயா ஒப்பிலா மாமணிக்கிரி வாசா
வித்தகா ஞான சத்தினி பாதா வெற்றி வேலாயுதப் பெருமானே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

*கணபதி துணை*

ஔவையார் அருளிய

# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன் அரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணு மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொழி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழ நுகரு மூசிக வாகன!
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுந்துந் தெளிவாப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திரமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுந்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஆறா தாரத் தங்குசை நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக்கரத்தின் ஈரெட்டுநிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்டகாயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்
இருள்வெளி யிரண்டுக் கொன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத் தழுத்திஎன் செவியில்
எல்லை யில்லா ஆனந் தம்அளித்
தல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவுக் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக! விநாயக! விரைகழல் சரணே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# பகவான்
# ஸ்ரீ ஸத்ய ஸாயி பாபா



ஸத்யம் - தர்மம் - சாந்தி - ப்ரேமை - அஹிம்சை

என்கின்ற ஐந்து சீலங்களே இவ்வுலகிலுள்ள எல்லா மதங்களினதும், ஆதார ஸ்ருதியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஜனை பாடல்கள்

1. கணேச சரணம் பரம பாவனம் ஸத்ய ஸாயினம் கஜானனம்
நித்ய ஸ்மரணம் பரம பாவனம் ஸத்ய ஸாயினம் கஜானனம்
ஸத்குரு சரணம் பரம பாவனம் ஸத்ய ஸாயினம் கஜானனம்
பவ பய ஹரணம் பரம பாவனம் ஸத்ய ஸாயினம் கஜானனம்

2. குரு தேவா சரணம் தேவா
பாஹி ப்ரபோ சரணம் தேவா
சுந்தர ரூபா ஸ்ரீ ஸாயி தேவா
சரணம் சரணம் ஸத்குரு தேவா

3. பஷ்ம பூஷிதாங்க சாயி சந்தர சேகரா
பால நேத்ர சூலதாரி ஸாயி சங்கரா (பஸ்ம)
ஸாம கான ப்ரியகரா ஸாயி சுந்தரா
ஹர ஹர ஹர சிவ சம்போ நடன சேகரா
பர்த்திவாச ஸாயி தேவ ஸாயி சங்கரா
ஸாயி சங்கரா ஸத்ய ஸாயி சங்கரா

4. துர்கா அம்பா பவானி ஜய் ஜய் துர்கா அம்பா பவானி
சங்கட ஹரிணி மங்கள காரிணி
ப்ரணவ ஸ்வரூபிணி மாதா ஜய் ஜய்
துர்கா அம்பா பவானி ஜய் ஜய்

5. சரவணா சிவ குமரா
ஷண்முக நாதா ஜய் ஜய் ஷண்முக நாதா
சுப்ரமண்யா கார்த்திகேயா கதிர்வேலா
ஷண்முக நாதா ஜய் ஜய் ஷண்முக நாதா
சரணம் சரணம் ஷண்முக நாதா - ஓம்

6. ஸ்ரீ ராம சரணம் ஸ்ரீ ராம சரணம் ஸ்ரீ ராம சரணம் பஜே (2)
வைதேஹி ராமம் வைகுண்ட ராமம்
புபால சூடாமணி (2)
ஆத்மாபி ராமம் ப்ரபு ஸாயி ராமம்
ஸ்ரீ ராம சரணம் பஜே (3)

7. ஹரி ஹரி நாராயணா
ஹரி கோவிந்த நாராயணா
ஹரி கோபால நாராயணா
ஹரி ஹரி நாராயணா
ரிஷிகேசா நாராயணா
பர்த்தீசா நாராயணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. மதுஸூதனா ஹரே மாதவா
ஸ்ரீ வாசுதேவா ஜனார்த்தனா - (2)
ஹரே கேசவா நாராயணா
ஸ்ரீ ஹரி கோவிந்த மனமோஹனா
ஜனார்த்தனா ஜகத் பாலனா
தீனாவனா துக்க பஞ்ஜனா
அரவிந்த லோசன ஆனந்தனா
ஸ்ரீ வாசுதேவா ஜயார்த்தனா - (2)

9. ப்ரசாந்தி நிலையா ராம் ஹே பர்த்திபுரி பகவான்
அஹல்யோத்தாரக ராம் ஹே தாஸரதே ரகு ராம்
ஸ்ரீ ராம ஜெய ராம்
ஸ்ரீ ராம் ராம் ராம் ஜய ராம் (2)
ஸாயி ராம் ராம் ராம் ஸாயி ராம்

10. அல்லா நாம பஜோ பஜோரே பஜோ மௌலா -
- நாம பஜோ பஜோரே பஜோ
நானக யேசு மஹாவீர நாம பஜோ
ஸ்ரீ புத்த தேவ பஜோ பஜோரே பஜோ
ஷிர்டி ஸாயி பாபா பஜோ பஜோரே பஜோ
ஸ்ரீ ரகு ராம பஜோ கோவிந்த க்ருஷ்ண பஜோ
ஸத்ய ஸாயி பாபா பஜோ பஜோரே பஜோ

11. ஸபரிகிரி வாசா பரம தயாளா
ஸ்வாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா (சபரிகிரி)
ஹரிஹர சுதனே ஸ்ரீ மணி கண்டா
ஸ்வாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா (2)

12. ஹே ராம பக்தா ஹே ராம தூதா
ஹே ராம தாஸா நமோ நமோ
சீதா மாதா சோக விநாசா
அனாத நாதா நமோ நமோ
மாருதி ராயா மஹானுபாவா
அதி பலவந்தா நமோ நமோ
ஆஞ்ஜனேயா நமோ நமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ## ஸ்ரீ காயத்ரி மந்த்ரம்

ஓம் பூர்புவ: ஸ்ஸுவ:
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோ ந: ப்ரசோதயாத்

ஓம் சாந்தி : சாந்தி : சாந்தி.

2. ## சாந்தி மந்த்ரம்

அஸதோ மா ஸத்கமய
தமஸோ மா ஜ்யோதிர்கமய
ம்ருத்யோர் மா அம்ருதம் கமய !

ஓம் சாந்தி : சாந்தி : சாந்தி.

## சர்வ மத ப்ரார்த்தனை

ஓம் தத்ஸத் ஸ்ரீ நாராயண தூ
புருஷோத்தம குரு தூ
ஸித்த புத்த தூ ஸ்கந்த விநாயக
ஸவிதா பாகவ தூ - (2)
ப்ரஹ்ம மஸ்ட தூ ய..வ சக்தி தூ
யேசு பிதா ப்ரபு தூ
ருத்ர விஷ்ணு தூ ராம க்ருஷ்ண தூ
ரஹீம் தாவோ தூ - (2)
வாஸு தேவ கோ விஸ்வருப தூ
சிதானந்த ஹரி தூ
அத்விதிய தூ அகால நிர்கய
ஆத்மலிங்க சிவ தூ - (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்கள ஆரத்தி

1. ஓம் ஜய் ஜகதீச ஹரே ஸ்வாமி ஸத்ய ஸாயி ஹரே
   பக்த ஜன ஸம்ரக்ஷக (2)
   பர்த்தி மஹேஸ்வரா - ஓம் ஜய் ஜகதீச ஹரே

2. சசி வதனா ஸ்ரீகரா ஸர்வ ப்ரர்ண பதே
   ஸ்வாமி ஸர்வ ப்ராண பதே
   ஆஸ்ரித கல்பலதீகா (2)
   ஆபத் பாந்கவா - ஓம் ஜய் ஜகதீச ஹரே

3. மாதா பிதா குரு தெய்வமு மரி அந்தயு நீவே
   ஸ்வாமி மரி அந்தயு நீவே
   நாத ப்ரஹ்ம ஜகன்னாதா (2)
   நாகேந்த்ரா ஸயனா ஓம் ஜய் ஜகதீச ஹரே

4. ஓம்கரா ரூபா ஓஜஸ்வி ஓம் ஸாயி மஹா தேவா
   ஸத்ய ஸாயி மஹா தேவா
   மங்கள ஆரத்தி அந்துகோ (2)
   மந்தர கிரிதாரி - ஓம் ஜய் ஜகதீச ஹரே

5. நாராயண நாராயண ஓம் ஸத்ய நாராயண
   நாராயண நாராயண ஓம் ....
   நாராயண நாராயண ஓம் ஸத்ய நாராயண நாராயண
   ஓம் ஸத்ய நாராயண நாராயண ஓம்
   ஓம் ஜய் ஸத்குரு தேவா

ஓம் சாந்தி : சாந்தி : சாந்தி.

**லோகா ... ஸ்ஸமஸ்தா ... ஸ்ஸுகினோ பவந்து**
**லோகா ... ஸ்ஸமஸ்தா ... ஸ்ஸுகினோ பவந்து**
**லோகா ... ஸ்ஸமஸ்தா ... ஸ்ஸுகினோ பவந்து**

## விபூதி மந்த்ரம

பரமம் பவித்ரம் பாபா விபூதிம்
பரமம் விசித்ரம் லீலா விபூதிம்
பரமார்த்த இஷ்டார்த்த மோகஷ ப்ரதாதம்
பாபா விபூதிம் இதமாஸ்ர யாமி.

**ஓம் ஸ்ரீ சாயி ராம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ॐ

AUM

# AN APPRECIATION

On the 3rd day of Feb. 2001, early in the morning at about 8.00 a.m. the shocking news came over the telephone. The voice at the other end broke out the grievous, sorrow stricken surprising news that Mrs. Ponnammah Velauthapillai passed away at Delmon Hospital. I couldn't believe my ears; for the previous day she asked for fruits greedily from Vanaja, her eldest daughter. Then, I never know, how symbolical and philosophical her demand was. Fruits, symbolised for the last day's request of Human Life. She seemed so young so energetic and full of hope for the future. Death had snatched her away, giving vain hope to us. Mrs. Velauthapillai has passed away so sudden, that we couldn't answer to her youngest daughter Jeya residing in Switzerland or to the others who are very closely attached to her.

Mrs. Pon. Velauthapillai was a devoted wife and a kind mother to her daughters. I have observed her as an exemplary house-wife with a great sense of duty, loyality and responsibility.


She was very religious and well informed of the rites and customs of our society in detail; which the present generations can't easily understand. She was very frank and open and very good at decision-making which most of us find difficult to finalise. Always she has been surrounded by her grand children and relatives - so closely attached with open heart. Eventhough her legs gave rheumatic troubles in the later days, she likes to go on Pilgrimages. Her anxiety and thurst for seeking the footsteps of Lord Kataragama paved way for us to join her in travelling to Kataragama a very enjoyable and pious trip which no one can deny.

Let us all pray her Soul rest in Peace, and guide us with light in the future.

Muhuntha Vigneswaran
No. 5 1/1, P.T.D Silva Mawatha,
Dehiwala.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குடும்பத்தவரின் நன்றி நவிலல்

## எமது அன்புத் தெய்வம்

## திருமதி. பொன்னம்மா வேலாயுதபிள்ளை அவர்கள்

எமது இல்லத்தலைவி நோயுற்று இருந்த வேளையில் வந்து நலம் விசாரித்து ஆறுதல் கூறியோருக்கும், அவர்கள் இறைவன் திருவடிப்பேறு எய்திய போது நேரில் கலந்து கொண்டவர்களுக்கும், உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து, தொலைத்தொடர்பு மூலமும், தந்திகள் மூலமும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், நாம் துயருற்றிருந்த போது எமது துயரில் பங்கு பற்றி பல வழிகளிலும் உதவிபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைத்து அன்பு உள்ளங்களிற்கும், இறுதிக்கிரியைகள் நிறைவுற வாகன உதவி புரிந்த அனைவருக்கும், ஈமச்சடங்கிற் பங்குபற்றி அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், 05.03.2001இல் நடைபெற்ற அந்தியேட்டி சபிண்டிகரணம் மற்றும் இன்று நிகழ்ந்த ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கணவன், பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

# ACKNOWLEDGEMENT


We the family members of the **Late Mrs. Ponnamma Velayuthapillai** sincerely thank and express our deep gratitude to all those who visited and wished speedy recovery. Also, we thank sincerely to all our friends, relations and our neighbours who participated in the last rites, sent messages of condolence, attended the funeral and helped in numerous ways at our time of grief. Once again, we take this opportunity on this day to thank those who participated in this 'Athma Shanthi' prayer ceremony and lunch at Bambalapitiya Government Flats Community Centre.

**Husband, Children, Sons-in-Law**
**Grand-Children**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Typeset and Printed at Print Graphics
289 1/2, Galle Road, Colombo-06. TP : 596312.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org